بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡم    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡم    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

**இது வெறும் முன்னறிவிப்பு மட்டுமல்ல. மாறாக, இது ஒரு மகத்தான வானத்தின் அடையாளமாகும். இதனை கண்ணியமும் மகத்துவமும் மிக்க இறைவன், நமது கண்ணியத்திற்குரிய நபியும், பரிவும் கருணையும் மிக்கவரும் ஆகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடைய உண்மை மற்றும் மகத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக வழங்கினான்**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 22 பிப்ரவரி 2019 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்றைய நாட்களில் ஜமாஅத்தில் முஸ்லிஹ் மவ்வூது தினம் என்ற அடிப்படையில் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய முன்னறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு அவை நடத்தப்படுகின்றன. அந்த முன்னறிவிப்பில் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம், அவர் மார்க்கத்தின் சேவகராக இருப்பார்; நீண்ட வாழ்நாளைப் பெறுவார்; ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்வார் என்று கூறப்பட்டிருந்தது. இந்த முன்னறிவிப்பு 20 பிப்ரவரி 1886 அன்று வழங்கப்பட்டது. இந்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட அல்லாஹ்வின் உதவி ஒத்தாசைகளுக்கும் அன்னாரின் உண்மைக்கும் பெரும் அடையாளமாகும். இந்த அடிப்படையில் இந்த குழந்தை 12 ஜனவரி 1889 –ல் பிறந்தது. அவருக்கு பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது என்று பெயர் வைக்கப்பட்டது. அவருக்கு அல்லாஹ், ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மரணத்திற்குப் பிறகு கிலாஃபத்தின் கிரீடத்தை அணிவித்தான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இந்த முன்னறிவிப்பு ஒரு மகன் பிறக்க இருப்பதை குறித்தல்ல. மாறாக மிக உயர்ந்த மகத்துவமிக்க மகனின் பிறப்பு குறித்து கூறப்பட்டது. அவர் பிறப்பதன் மூலம் ஓர் ஆன்மீக புரட்சி ஏற்பட இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இவ்விடத்தில் நீங்கள் கண்ணை திறந்து பார்க்க வேண்டும். இது வெறும் முன்னறிவிப்பு மட்டுமல்ல. மாறாக, இது ஒரு மகத்தான வானத்தின் அடையாளமாகும். கண்ணியமும் மகத்துவமும் மிக்க இறைவன், நமது கண்ணியத்திற்குரிய நபியும், பரிவும் கருணையும் மிக்கவரும் ஆகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடைய உண்மை மற்றும் மகத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக வழங்கினான். உண்மையில் இந்த அடையாளம் ஓர் இறந்தவரை உயிர்ப்பிப்பதை விட நூற்றுக்கணக்கான மடங்கு உயர்ந்ததும், மேலானதும் பரிபூரணமானதுமாகும். இறந்தவரை உயிரூட்டுவதன் உண்மை என்னவெனில், இறை சன்னிதானத்தில் துஆ செய்து ஓர் உயிரைத் திரும்பப் பெறுவதாகும். இறை அருள், கருணை மற்றும் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா ஸல்லல்லாஹு வஆலிஹி வஸல்லம் அவர்களின் பரக்கத்தால் கண்ணியமிக்க இறைவனிடம் இந்த எளியவன் செய்த துஆவின் விளைவால் ஒரு பரக்கத் நிறைந்த ஓர் ஆன்மாவை அனுப்புவதாக வாக்குறுதி வழங்கினான். அவரது வெளிப்படையான மற்றும் மறைமுகமான பரக்கத்துகள் முழு உலகிலும் பரவும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எனவே ஒரு சாதாரண ஆன்மா வேண்டப்படவில்லை. மாறாக ஓர் அடையாளம் கேட்கப்பட்டது. அதற்குப் பதிலாக அல்லாஹ் நிறைய சிறப்புகளைக் கொண்ட ஒரு மகன் பற்றி செய்தி அறிவித்தான். ஒரு கம்பீரமிக்க மகனைப் பற்றி கூறப்பட்டது. அவர் வாழ்நாளைப் பெறுவார். மிகவும் வல்லமையும் புரிதிறனும் உள்ளவராக இருப்பார். மகத்துவமும், கம்பீரமும், செல்வமும் கொண்டவராக இருப்பார். சமுதாயம் அவரிடமிருந்து பரகத்தைப் பெறும். அவர் வெளிப்படையான மற்றும் மறைமுகமான அறிவுகளால் நிரப்பப்படுவார். கலாமுல்லாஹ்வாகிய திருக்குர்ஆனின் ஆழமான புரிதிறன் அவருக்கு வழங்கப்படும். இறைவனால் வழங்கப்பட்ட அந்த புரிதிறன் கொண்டு திருக்குர்ஆனுக்கு மகத்தான தொண்டாற்றுவார். அதன் மூலம் அல்லாஹ்வின் வார்த்தைகளின் கண்ணியம் மக்களிடம் வெளிப்படும். அவர் கைதிகளின் விடுதலைக்கு காரணமாக இருப்பார். அவரது வாழ்நாளில் உலகத்தில் பெரும் அழிவு ஏற்படும். அது உலகை நெருப்பால் எரித்து விடும். அவர் முழு உலகிலும் பிரபல்யம் அடைவார்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அன்னாரது கல்வி பற்றி கூறுவதாயின், அன்னார் திருக்குர்ஆன் ஓதி முடித்த பிறகு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார்கள். உலகியல் கல்வி கற்றார்கள். அது எந்த அளவுக்கு இருந்தது என்றால், வீட்டிலும் உருது, ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களே கூறியுள்ளார்கள். அதாவது, எனது கல்வி சம்பந்தமாக எனது பெரும் நன்றிக்குரியவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஆவார்கள். அன்னார் மருத்துவராக இருந்தார்கள். நான் புத்தகங்களை நீண்ட நேரம் வாசிப்பதற்கு தகுதியானவன் இல்லை என்பதை அன்னார் அறிந்திருந்தார்கள். எனவே

அவர்களின் நடைமுறை எவ்வாறிருக்குமென்றால், அன்னார் என்னை தமக்கு அருகில் அமர்த்திக் கொண்டு, மியான், நான் படித்துக் கொண்டே செல்கிறேன். நீ கேட்டுக் கொண்டே இரு என்று கூறுவார்கள். காரணம் ஆரம்ப காலத்தில் எனது கண்களில் நோய் இருந்தது. கடும் வலியும் இருந்தது. மருத்துவர்கள் இவரது பார்வை போய் விடும் என்று கூறி இருந்தனர். அந்த நோயின் கடுமை மற்றும் தொடர் தாக்குதலால் எனது ஒரு கண்ணின் பார்வை போய் விட்டது. எனது இடது கண்ணில் பார்வை இல்லை. பாதையை பார்க்க முடியும். ஆனால் நூல்களை வாசிக்க முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எனது ஆசிரியர்களிடம் கூறி இருந்தார்கள். அதாவது இவர் விருப்பப்படி படிக்கட்டும். இவர் விரும்பும் அளவுக்கு படிக்கட்டும். படிக்கவில்லை என்றால் அழுத்தம் கொடுக்க வேண்டாம். ஏனெனில் படிப்பின் சுமையைத் தாங்கும் அளவுக்கு அவருடைய உடல் நலமாக இல்லை என்று கூறியிருந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் என்னிடம் மீண்டும் மீண்டும் கூறியிருந்தார்கள். நீங்கள் திருக்குர்ஆனின் மொழிபெயர்ப்பையும் புகாரியையும் மவ்லவி சாஹிபிடம் கற்றுக் கொள்ளுங்கள். அதாவது மவ்லானா நூருத்தீன் சாஹிப் (முதல் கலீஃபத்துல் மஸீஹ்) அவர்களிடம் கற்றுக் கொள்ளுங்கள் என்பார்கள். இது தவிர அன்னார் இவ்வாறும் கூறியிருந்தார்கள். மருத்துவமும் சிறிது கற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் அது நமது குடும்பத்தினரின் திறமையாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: மாஸ்டர் பகீருல்லாஹ் சாஹிப் பள்ளிக்கூடத்தில் எமது கணிதப் பாடத்தின் ஆசிரியராக இருந்தார்கள். ஒருமுறை மாஸ்டர் பகீருல்லாஹ் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் என்னைப் பற்றி புகார் கூறினார். ஹுஸூர்! இவர் சிறிதும் படிப்பதில்லை. சிலவேளை பள்ளிக்கு வருகிறார். சிலவேளை வருவதில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு நினைவில் உள்ளது. அதாவது மாஸ்டர் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் புகார் கூறியதும் நான் பயந்து ஒளிந்து கொண்டேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எவ்வளவு கோபப்படுவார்களோ என்று பயந்தேன். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அவர் கூறுவதைக் கேட்டு மாஸ்டர் சாஹிபிடம், உங்களது பெரும் கருணை, நீங்கள் பையன் பற்றி பெரிதும் கவனத்தில் வைத்துள்ளீர்கள். நீங்கள் கூறுவதைக் கேட்டு எனக்கு மகிழ்ச்சி. இவர் சிலவேளைகளில் பள்ளிக்குச் செல்கிறார் என்று கூறுவதில் மகிழ்ச்சி. இவர் அவ்வப்போது செல்வது மிகவும் நல்ல விஷயமாகும். எனது கருத்தின்படி இவர் படிக்கும் அளவுக்கு இவருக்கு உடல் நலம் இல்லை என்றார்கள்.

மேலும் அன்னார் சிரித்தவாறு, இவருக்கு கணக்கு தெரிந்திருப்பதற்கு, நாம் இவருக்கு மாவும் பருப்பும் விற்கும் கடை திறந்து கொடுக்கப் போவதில்லை. இவருக்கு கணக்கு வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி பரவாயில்லை என்று கூறினார்கள்.

மேலும் அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரது சஹாபாக்கள் என்ன கணிதம் கற்றார்கள்? இவர் பள்ளிக்கூடம் சென்றால் நல்லது. இவரை ஒருபோதும் நிர்பந்தப்படுத்த வேண்டாம். இதனைக் கேட்டு மாஸ்டர் சாஹிப் திரும்பிச் சென்று விட்டார். நான் இந்த மென்மையிலிருந்து மேலும் பயன் பெற ஆரம்பித்தேன். பிறகு நான் பள்ளிக்கூடம் செல்வதையே விட்டு விட்டேன். மாதத்தில் ஒருநாள் அல்லது அரை நாள் பள்ளிக்கூடம் செல்வேன் என்றால் அது வேறு விஷயம். இவ்வாறு எனது கல்வி சென்றது. நான் உண்மையில் நிர்பந்தமான நிலையில் இருந்தேன். கண் நோயுடன் எனக்கு ஈரலில் நோய் இருந்தது. அதற்கு எனக்கு சிகிச்சைக்காக ஆறு மாதங்கள் வரை ஒருவகை பருப்பு கலந்த தண்ணீர் மற்றும் ஒரு பச்சை மூலிகை தண்ணீர் தரப்பட்டது. மேலும் எனக்கு தொண்டைபுண் இருந்தது.

சுருக்கமாக, எனக்கு ஈரல் நோய், கீழ்ப்பகுதி நோய், பிறகு அதிகமாக காய்ச்சல் இருந்தது. அதுவும் ஆறு மாதங்கள் வரை குறையாமல் இருக்கும். இவை அனைத்தின் காரணமாக எனது படிப்பு குறித்து பெரியவர்களை முடிந்தவரை இவர் படிக்கட்டும். அழுத்தம் தர வேண்டாம் என்று முடிவெடுக்க வைத்தது. இந்த நிலையில் இருந்தவாறு ஒருவர் எனது கல்வியின் தகுதி எவ்வாறிருந்தது என்று புரிய முடியும்.

முதல் கலீஃபா அவர்கள் எப்போதும் என்னிடம் கூறி வந்தார்கள். மியான்! நீயே படிக்கும் அளவுக்கு உனக்கு உடல் நலமாக இல்லை. என்னிடம் வா. நான் படித்துக் கொண்டே செல்வேன். நீர் கேட்டுக் கொண்டே செல்லுங்கள். இவ்வாறு அவர்கள் அழுத்தம் தந்து திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்தார்கள். பிறகு புகாரி கற்றுக் கொடுத்தார்கள். அன்னார் கொஞ்சம் கொஞ்சமாக கற்றுக் கொடுக்கவில்லை. மாறாக அவர்களது நடைமுறை அவ்வாறிருந்தது. அவர்கள் குர்ஆன் படித்துக் கொண்டே செல்வார்கள். அத்துடன் மொழிபெயர்த்துக் கொண்டே செல்வார்கள். அவசியம் என்று கருதும் இடங்களில் மட்டும் விளக்குவார்கள். அதுவன்றி விரைவாகவே கற்றுத் தருவார்கள். மூன்று மாதங்களில் அன்னார் முழு குர்ஆனையும் கற்றுக் கொடுத்தார்கள். பிறகு நான் அன்னாரிடம் மருத்துவமும் படித்தேன். திருக்குர்ஆன் விரிவுரையும் படித்தேன். திருக்குர்ஆன் தஃப்ஸீர் அன்னார் இரண்டு மாதங்களில் முடித்து விட்டார்கள்.

அன்னார் என்னை தமக்கருகில் அமர்த்திக் கொள்வார்கள். சிலவேளை பாதி, சிலவேளை முழுவதுமாக மொழிபெயர்ப்பை படித்துக் கேட்கச் செய்வார்கள். அத்துடன் விரிவுரையையும் கூறுவார்கள். அதுபோன்று புகாரியையும் இரண்டு மூன்று மாதங்களில் முடித்து விடுவார்கள். ஒருமுறை ரமலான் மாதத்தில் அன்னார் முழு குர்ஆனுக்கும் தர்ஸ் கொடுத்தார்கள்.

அதிலும் நான் பங்கெடுத்தேன். அன்னாரிடம் சில அரபி பத்திரிகைகளைப் படிக்கவும் தற்செயலாக வாய்ப்பு கிடைத்தது. சுருக்கமாக, இதுவே எனது அறிவு சார்ந்த முயற்சிகளாகும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்தான் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தான் என்பதற்கு அன்னாரது சொற்பொழிவுகளும் குத்பாக்களும் எழுத்துக்களும் சாட்சியாக உள்ளன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாழ்வில் 1906 –ல் ஆண்டு மாநாட்டில் அன்னார் முதலில் பொதுமக்களிடம் சொற்பொழிவாற்றினார்கள்.

காஸி முஹம்மது நூருத்தீன் அக்மல் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நுபுவ்வத்தின் பாதையிலுள்ள ஒளிமிக்க நட்சத்திரமும் நுபுவ்வத்தின் வழித்தோன்றலின் வைரமுமாகிய மஹ்மூது ஸல்லமஹுல்லாஹ் இணைவைப்பை ஒழித்தல் சம்பந்தமாக சொற்பொழிவாற்ற எழுந்தார்கள். அவர்களது சொற்பொழிவை கவனமாகக் கேட்டேன். அதிலிருந்த பொருட்செறிவின் வெள்ளத்தின் வேக ஓட்டத்தைக் கண்டேன். இந்த சிறிய வயதில் அவர்களின் உறுதி அற்புதத்தை விட குறைந்ததல்ல. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மைக்கும் பெரும் அடையாளமாகும். அதன் மூலம் மஸீஹிய்யத்தின் ஊற்றின் பயிற்சியின் விளைவு எவ்வளவு முழுமையாக இருந்தது என்பதைப் பற்றிய அன்னாரின் ஆன்மீக முழுமையின் வியத்தகு விவாதத்தை அது எடுத்து வைத்தது.

அக்காலத்தில் மார்க்கப் பணிகள் மற்றும் வேகமான ஆன்மீக மனவளமிக்க வளர்ச்சி அன்னாரைக் குறித்த அவர் விரைவாக வளர்வார் என்ற முன்னறிவிப்பின் வார்த்தைகளை உண்மைப்படுத்தின. இந்த வகையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவரது மார்க்க எழுச்சியை உணர்ந்தார்கள்.

இந்த வகையில் அன்னார் ஓரிடத்தில் கூறினார்கள்: மியான் மஹ்மூதிடம் எந்த அளவுக்கு மார்க்க ஆர்வம் காணப்படுகிறதோ அதனைப் பார்த்து சிலவேளை சிறப்பாக அவருக்காக துஆ செய்கிறேன்.

இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வார்த்தைகளாகும். நிச்சயமாக இந்த அளவுக்கு காரணம் அல்லாஹ் இவரையே முன்னறிவிக்கப்பட்ட மகனாக ஆக்க வேண்டும். இவர் மீது தனது அருள்களின் மழையை விரைவாக பொழிய வைக்க வேண்டும். எல்லா நற்செய்திகளையும் அவரது ஹக்கில் நிறைவேற்ற வேண்டும் என்பதற்கேயாகும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் எழுதிய வாழ்க்கை வரலாற்றில் ஓரிடத்தில் எழுதுகின்றார்கள்: முதல் கிலாஃபத்தின் ஆரம்பத்தில் அன்னாருக்கு வயது 19. முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது வஃபாத்தின்போது இவர்களது வயது 26 ஐ எட்டியிருந்தது. இந்த இளவயதில் அன்னாரின் எழுத்துக்கள், பேச்சுக்களின் சில உதாரணங்களை எடுத்து வைக்கிறேன். அன்னாரின் கருத்துக்கள் சிந்தனைகள் ஆகியவற்றில் ஒரு முதிர்ந்த சிந்தனையாளரின் உறுதித்தன்மை காணப்பட்டது. அன்னாரின் வார்த்தைகள், தாக்கம், ஈர்ப்பு, கலப்பின்மை, எளிமை ஆகியவற்றால் தோய்க்கப்பட்ட செயற்கையற்ற பகடற்ற வார்த்தைகளாகத் திகழ்ந்தன. சொற்பொழிவில் ஓர் இயல்பான நடையும் எழுத்தில் மேன்மையும் ஒரு பெருக்கும் கொண்ட நதியாக இருந்தது. பேச்சும் எழுத்தும் திருக்குர்ஆனின் அறிவும் ஞானமும் ஆகிய தண்ணீரால் நிறைந்து உள்ளம் மற்றும் மூளையை பண்படுத்தின.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு 19 வயதில் அன்னாரது முதல் சொற்பொழிவு குறித்து அறிவும் அருளும் நிறைந்த பெரியவர் ஹஸ்ரத் மவ்லவி ஷேர் அலி சாஹிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இன்னொரு சம்பவத்தை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். அது ஹுஸூர் (ரலி) அவர்களின் முதல் சொற்பொழிவு குறித்ததாகும். அதாவது மவ்லவி சாஹிபுடைய காலத்தில் அன்னார் உயிருடன் இருக்கிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு நடந்த முதல் ஆண்டு மாநாட்டில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் சொற்பொழிவாற்றினார்கள். இது மத்ரஸா அஹ்மதிய்யா வளாகத்தில் நடந்தது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹின் வலப்பக்கத்தில் மேடையில் அமர்ந்திருந்தார்கள். அந்த சொற்பொழிவில் இரு விஷயங்கள் குறிப்பிடத்தகுந்தவையாக இருந்தன.

முதல் வியக்கத்தக்க விஷயம் அன்னாரின் குரல், எடுத்து வைக்கும் விதம், தொனி, நடைமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நடைமுறையை முற்றிலும் ஒத்ததாக இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வஃபாத் ஆகி சில சாலமே கழிந்திருந்ததால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாக்களிக்கப்பட்ட மகனின் உதடுகளிலிருந்து வந்த வார்த்தைகள், அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நேரில் கண்டிருந்த காரணத்தால் கண்களிலிருந்து மறைந்துள்ள ஒருவரின் வார்த்தைகளை கிராமபோனில் கேட்பது போன்று உணர்ந்து கண்ணீர் விட்டனர். அவ்வாறு கண்ணீர் விட்டவர்களில் நானும் ஒருவன் ஆவேன்.

இரண்டாவது விஷயம் என்னவென்றால், அந்த சொற்பொழிவில் இந்த கூறத்தக்க விஷயமாவது, பேச்சு முடிந்ததும் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் முழு வாழ்வையும் திருக்குர்ஆனை ஆய்வு செய்வதிலேயே கழித்து, திருக்குர்ஆனையே தமது ஆன்மாவின் உணவாகக் கொண்டிருந்த அம்மனிதர் கூறினார்கள்: மியான் பல வசனங்களுக்கு கொடுத்த விளக்கங்கள் எனக்கே புதியவையாக இருந்தது.

இந்த ஞானங்களை இந்த இளைஞருக்கு யார் கற்றுக் கொடுத்தார்கள்? திருக்குர்ஆனின் யூஸுஃப் (அலை) அவர்கள் பற்றி அல்லாஹ், நாம் அவர் உறுதியான வயதை அடைந்தபோது அவருக்கு அறிவு ஞானம் வழங்கினோம். இவ்வாறே நற்செயல் செய்பவருக்கு நற்கூலி வழங்குகிறோம் என்று கூறுகின்றான்.

அவர்கள் கூறுகிறார்கள்: அன்னார் பொதுவாக அறிவு மற்றும் ஞானம் நிறைந்த வார்த்தைகளைக் கூறவில்லை. மாறாக, திருக்குர்ஆனில் மறைந்துள்ள ஞானங்களை எடுத்துக் கூறினார்கள். அல்லாஹ் திருக்குர்ஆனைப் பற்றி கூறுகிறான்: لَّا يَمَسُّهُۥٓ إِلَّا ٱلْمُطَهَّرُونَ அதாவது தூயவர்களைத் தவிர வேறு எவரும் இதனை தொட முடியாது. சிறு வயதின் தனிமையிலிருந்து வெளி வந்த உடனேயே திருக்குர்ஆனின் புதிய நுட்ப ஞானங்களைக் கூறுவது அன்னார் சிறு வயதிலேயே அல்லாஹ்வின் சிறப்பான தர்பிய்யத்தில் வளர்த்தார்கள் என்பதற்கு தெளிவான சான்றாகும். அன்னார் சிறு வயதிலிருந்தே தூய்மையாக்கப்பட்டவர்களின் கூட்டத்தில் ஒருவராக இருந்தார்கள்.

அன்னாரின் இறைவணக்கங்களின் தரம் சிறு வயது முதலே எவ்வாறிருந்தது? என்பது பற்றி ஷேக் குலாம் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறுகின்றார்கள்.

இன்றைய இரவை மஸ்ஜிது முபாரக்கில் தனிமையில் கழிக்க வேண்டும் என்றும், தனிமையில் எதையெல்லாம் விரும்புகிறேனோ அதைக் கேட்பேன் என்றும் எண்ணியவாறு பள்ளியை சென்றடைந்தபோது ஒருவர் ஸஜ்தாவில் துஆ செய்தவாறு தேம்பி தேம்பி அழுவதைப் பார்த்து என்னால் தொழ முடியவில்லை. அவரது துஆவின் தாக்கம் என் மீதும் ஏற்பட்டது. எனவே நான், இறைவா! இம்மனிதர் உன்னிடம் எதைக் கேட்கிறாரோ அதை வழங்கி விடு என்று துஆ செய்தேன்.

இவர் தலையைத் தூக்கினால் இவர் யாரென்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணத்தில் நான் நின்று நின்று சோர்ந்து விட்டேன். அவர் தலையை உயர்த்தியபோது அது மியான் மஹ்மூது அஹ்மது சாஹிப் ஆவார்கள் என்பதைக் கண்டேன். நான் அஸ்ஸலாமு அலைக்கும் கூறி அவரை கட்டித் தழுவினேன். மேலும் அவர்களிடம், மியான்! இன்று அல்லாஹ்விடம் எதையெல்லாம் வாங்கினீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அன்னார் கூறினார்கள்: நான் அல்லாஹ்விடம், இறைவா! நீ என் கண்களுக்கு முன் இஸ்லாத்தை உயிப்பித்துக் காட்டு என்று கேட்டேன் என்று கூறி விட்டு உள்ளே சென்று விட்டார்கள். இஸ்லாத்தின் வெற்றியின் நாட்களைக் காணும் ஒரு துடிப்பு சிறு வயதிலேயே அவர்களின் உள்ளத்தில் இருந்தது. அவருக்கு அல்லாஹ் இளம் வயதிலேயே கிலாஃபத்தின் கிரீடத்தை அணிவித்தான்.

ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா மஹ்மூது அஹ்மது சாஹிப் தஷ்கிஸல் அஸ்ஹானில் ஒரு துஆவை குறிப்பிடுகிறார்கள். **1909** –ல் அன்னார் எழுதியது. அல்லாஹ்விடத்தில் அன்னார் இவ்வாறு துஆ செய்தார்கள்: என் இறைவா! உள்ளத்து வேதனையுடனும், உண்மையான துடிப்புடனும் உன்னிடம் விழுந்தவனாக, உன்னிடம் சஜ்தா செய்தவனாக கேட்கின்றேன். எனது துஆவை கேட்பாயாக. செவி கொடுப்பாயாக. எனது அழைப்பை அறிந்து கொள்வாயாக. பரிசுத்தவாளனாகிய இறைவா! எனது சமுதாயம் அழிந்து கொண்டிருக்கிறது. அவர்களை அழிவிலிருந்து காப்பாற்றுவாயாக.

அவர்கள் அஹ்மதி என்று கூறினால் அவர்களின் உள்ளம் தூய்மையாக இல்லை என்றால், உன் மீதான அன்பில் தம்மை மாய்த்துக் கொள்ளவில்லை என்றால் எனக்கு அவர்களுடன் என்ன தொடர்பு உள்ளது?

எனது இறைவா! உனது ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத்தின் பண்புகளுக்கு எழுச்சியூட்டுவாயாக. அவர்களை தூய்மையாக்குவாயாக. சஹாபாவின் எழுச்சியை அவர்களிடம் உருவாக்குவாயாக. அவர்கள் உனது மார்க்கத்திற்காக வேதனை கொள்ளட்டும்! அவர்களின் செயல்கள் அவர்களது சொற்களை விட உயர்ந்ததாக இருக்கட்டும்! தூய்மையாக இருக்கட்டும்! உனது நேசத்திற்குரிய முகத்திற்காக அவர்கள் அர்ப்பணமாகட்டும்! அவர்கள் உனது நபி கரீம் (ஸல்) அவர்களுக்காக அர்ப்பணமாகட்டும்! உனது மஸீஹின் துஆ அவர்களுக்காக ஒப்புக் கொள்ளப்படட்டும்! மேலும் அவர்களது தூய மற்றும் உண்மையான போதனை அவர்களின் உள்ளங்களை சூழட்டும்!

என் இறைவா! எனது சமுதாயத்தை எல்லா சோதனைகளிலிருந்தும் துக்கத்திலிருந்தும காப்பாற்றுவாயாக. அவர்களில் பெரும் பெரும் சான்றோர்களை உருவாக்குவாயாக. அவர்கள் நீ விரும்பிய ஒரே சமுதாயமாகட்டும்! நீ தேர்ந்தெடுத்த சமூகமாகட்டும்! அவர்களை ஷய்த்தானின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாப்பாயாக. மலக்குமார்கள் அவர்கள் மீது இறங்கி கொண்டே இருக்கட்டும். அந்த சமுதாயத்தின் மார்க்கத்தையும் உலகத்தையும் அருளுக்குரியதாக ஆக்குவாயாக. ஆமீன்! ஸும்ம ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!!

இறுதியில் ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள்: அல்லாஹ் ஆயிரக்கணக்கான ரஹ்மத்துகளை அவர்கள் மீது இறக்குவானாக. மேலும் நமக்கும் அன்னாரின் வேதனை நிரம்பிய துஆவை புரிந்து கொள்ளவும், அஹ்மதியாக இருப்பதன் நோக்கத்தை புரிந்து கொள்ளவும் அல்லாஹ் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்**